# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி

**அசல் வழக்கு எண் 135/2014**

பெயர்: **தங்கவேல்** நாள்: 09.11.2023

வா.சா.1 – முதல் விசாரணை தொடர்ச்சி

வா.சா.1 – தங்கவேல் - சத்திய பிரமாணத்தின் பேரில் கூடுதல் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறார்.

1) வழக்கு சர்வே எண் 94/15C மற்றும் 95/5க்கான நில உடமை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட அ பதிவேடு சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.**52 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2) ராசு த/பெ. கொழந்தாகவுண்டர் என்பவர் பெயரில் வழங்கப்பட்ட கந்தாய ரசீது அசல் **வா.சா.ஆ.**53 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3) பெருமாள் த/பெ. கொழந்தாகவுண்டர் என்பவர் பெயரில் வழங்கப்பட்ட கந்தாய ரசீது அசல் **வா.சா.ஆ.**54 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4) பொன்னி சர்க்கரை ஆலைக்கு கரும்பு வழங்கியதற்கான ரசீது அசல் **வா.சா.ஆ.**55 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5) சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், புள்ளாக்கவுண்டம்பட்டி அக்ரஹாரம் கிராம பட்டா 125க்கான இணைய வழி நகல் **வா.சா.ஆ.**56 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6) சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், புள்ளாக்கவுண்டம்பட்டி அக்ரஹாரம் கிராம சர்வே எண் 94/12B, 13D, 14A, 95/5, 96/12. 15, 18, 33க்கு பசலி 1432க்கு வழங்கப்பட்ட சாகுபடி அடங்கல் கணக்கு சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.**57 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7) சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், புள்ளாக்கவுண்டம்பட்டி அக்ரஹாரம் கிராம சர்வே எண் 94/12B, 13D, 14A மற்றும் 95/5க்கு பசலி 1432க்கு வழங்கப்பட்ட சாகுபடி அடங்கல் கணக்கு சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.**58 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8) 07.10.1986 தேதியிட்ட கிரைய ஆவணம் உண்மை நகல் **வா.சா.ஆ.**59 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

9) 08.04.1987 தேதியிட்ட கிரைய ஆவணம் உண்மை நகல் **வா.சா.ஆ.**60 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

10) 18.06.2018 தேதியிட்டு வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் வழங்கிய ந.க.எண் 1121/2015(பி) 1 முதல் 3 வாதிகள் மற்றும் சிலர் அளித்த ஆட்சேபனை நகல் **வா.சா.ஆ.**61 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

11) 30.04.2018 தேதியிட்டு வருவாய் கோட்டாட்சியர், சங்ககிரி அவர்கள் அனுப்பிய இறுதி அழைப்பாணை மற்றும் எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்த ஆட்சேபனை நகல் **வா.சா.ஆ.**62 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

12) 21.07.2018 தேதியில் வாதிகள் மற்றும் சிலர் அனுப்பிய மனு நகல் **வா.சா.ஆ.**63 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

13) 26.06.2018 தேதியிட்டு வருவாய் கோட்டாட்சியர், சங்ககிரி அவர்கள் அனுப்பிய அழைப்பாணை நகல் மற்றும் ஆட்சேபனை நகல் **வா.சா.ஆ.**64 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

14) 01.12.2016 தேதியிட்டு வருவாய் கோட்டாட்சியர், சங்ககிரி அவர்களுக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு நகல் **வா.சா.ஆ.**65 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

15) 31.08.2018 தேதியிட்டு வருவாய் கோட்டாட்சியர், சங்ககிரி அவர்களின் நடவடிக்கைகள் நகல் **வா.சா.ஆ.**66 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

16) 03.09.2018 தேதியிட்டு சங்ககிரி வருவாய் கோட்டாட்சியர் அவர்களின் செயல்முறைகள் நகல் **வா.சா.ஆ.**67 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

17) சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், புள்ளாக்கவுண்டம்பட்டி அக்ரஹார கிராம பட்டா எண் 1043 க்கான இணைய வழி நகல் **வா.சா.ஆ.**68 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

18) 30.10.2018 தேதியிட்ட மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சேலம் வழங்கிய அழைப்பாணை நகல் **வா.சா.ஆ.**69 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

19) 15.12.2019 தேதியிட்டு சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் நகல் **வா.சா.ஆ.**70 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

20) 05.03.2020 தேதியில் சேலம் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் செயல்முறைகள் உண்மை நகல் **வா.சா.ஆ.**71 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

21) 02.12.2013 தேதியில் விஜயா என்பவர் காவல் துறை கண்காணிப்பாளர், நில அபகரிப்பு மற்றும் தடுப்பு தனிப்பிரிபு, மைலாப்பூர், சென்னை அவர்களுக்கு அளித்த மனு நகல் **வா.சா.ஆ.72** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

22) சேலம் DCB (நில அபகரிப்பு தடுப்பு பிரிவு) குற்ற எண் 17/14 க்கான முதல் தகவல் அறிக்கை நகல் **வா.சா.ஆ.73** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(வா.சா.ஆ.52 முதல் வா.சா.ஆ.73 வரையிலான ஆவணங்கள் வழக்கிற்கு பின்னிட்டவை என்பதாலும், தகவல் அறியும் உரிமைச் சட்டப்படி பெறப்பட்டதாக குறிப்பிட்டுள்ளதாலும், சம்பந்தப்பட்ட பொது தகவல் அலுவலர் தகவல் அறியும் சட்டப்படி அனுப்பிய குறிப்பறிக்கை மேற்படி சான்றாவணங்களுடன் தாக்கல் செய்யாத நிலையில், மேற்படி ஆவணங்களை சான்றாவணங்களாக ஏற்க முடியாது என்று பிரதிவாதிகளின் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது).

பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க வா.சா.1 ன் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

ஒப்பம்/தங்கவேல்

ஒப்பம்/திரு.ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.